# திராவிட மாடல் அரசு

108

ர.பிரகாசு

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**






# மனுநீதிக்கு எதிரான மானுட நீதி!

## கலைஞர் கைவினைத் திட்டம்!

1954-ஆம் ஆண்டு ‘சக்கரவர்த்தித் திருமகன்’ என்று இராமாயணத்தை எழுதினார் ராஜாஜி. ராஜாஜியின் தந்தை பெயரும் சக்கரவர்த்திதான். அதனால் ‘சக்கரவர்த்தியின் திருமகன்’ என்ற தலைப்பில், மூகாஜி என்ற பெயரில் முரசொலியில் ராஜாஜிக்குப் பதில் எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர். இந்த சம்பவம் நடப்பதற்கு முன்பு, வேறொரு சம்பவத்தைச் செய்திருந்தார் ராஜாஜி. அதன் மீதான கோபத்தைக்கூட கலைஞர் இப்படி வெளிப்படுத்தியிருக்கக்கூடும். ஏனென்றால், 1953-இல் முதலமைச்சராக இருந்த ராஜாஜி, ‘பள்ளிக்குழந்தைகள் பாதி நேரம் படித்தால் போதும், மீதி நேரம் குடும்பத் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும்’ என்று ஒரு திட்டத்தை கொண்டுவந்தார். ‘இது குலக்கல்வி திட்டம், ஒருபோதும் அனுமதியோம்’ என்று பெரியாரும் அண்ணாவும் கொந்தளித்தனர்.

ராஜாஜி பதவியை விட்டு விலக நேர்ந்தது, பின்னர் வந்த காமராசர் அம்முடிவைக் கைவிட்டார். அப்படி, 70 ஆண்டுகளுக்கு முன்பே பெரியார், அண்ணாவால் சவப்பெட்டியில் வைத்து ஆணி அடிக்கப்பட்ட அரதப்பழசான ஒரு திட்டமான குலக்கல்வி திட்டத்திற்கு முலாம் பூசி, ‘குலத்தொழில் திட்டம்’ ஒன்றை ஒன்றிய அரசு 2023-ஆம் ஆண்டு தூக்கிக்கொண்டு வந்தது. அதன் பெயர் ‘விஸ்வகர்மா யோஜனா’.

தச்சு வேலை செய்பவர், செருப்பு தைப்பவர், கொத்தனார் வேலை செய்பவர், முடி திருத்துவோர், சலவைத் தொழில் செய்வோர், மண்பாண்ட வேலை செய்வோர் என 18 வகையான தொழில்களுக்கு பயிற்சியும் கடனும் வழங்குவது இத்திட்டம். நாடு முழுக்க எல்லா மாநிலங்களும் இதனை தொழில் பயிற்சி, கடன் திட்டமாகவே பார்த்தன. ஆனால், வழக்கம்போல தமிழ்நாடு மட்டும் இதன் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றியது.

ஏனென்றால், யார் யாரெல்லாம் இத்தொழிலைப் பாரம்பரியமாக செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் இச்சலுகை பொருந்தும் என்பது இத்திட்டத்தின் விதிமுறை. ஆகவே, ராஜாஜி கொண்டுவந்த கல்வித் திட்டத்திற்கும், மோடி(ஜி) கொண்டு வந்திருக்கிற இந்தத் தொழில் திட்டத்திற்கும் நோக்கம் ஒன்றுதான். அவரவர் குலத்தொழிலை அவரவர் செய்ய வேண்டுமென்ற மனுநீதிதான். அதனால்தான் மானுட நீதி பேசும் திராவிட மாடல் அரசு ‘விஸ்வகர்மா யோஜனா’ திட்டத்தை ஏற்கவில்லை.

ராஜாஜிக்கு கலைஞர் அளித்த மூகாஜி பதிலடி போல, மோடியின் விஸ்வகர்மா திட்டத்திற்குப் பதிலடியாக ‘கலைஞர் கைவினைத் திட்ட’த்தைக் கொண்டுவந்தார், தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

### கலைஞர் கைவினைத் திட்டம்!

‘கைவினைக் கலைஞர்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்படும்’ என 2024-25 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு தெரிவித்தது. 20 கோடி ரூபாய் இதற்காக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. முறைப்படி தொழில் பயிற்சி பெற்று, நவீன முறையில் கைவினைத் தொழில் தொடங்க ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கம். 2024-ஆம் ஆண்டில் புரட்சியாளர் அம்பேத்கரின் நினைவு நாளான டிசம்பர் 6-ஆம் தேதி, கலைஞர் கைவினைத் திட்டத்திற்கான அரசாணை வெளியிடப்பட்டது. விஸ்வகர்மா யோஜனாவைப் போல குடும்பத் தொழிலை அடிப்படையாகக் கொள்ளாமல், யார் வேண்டுமானாலும் பயனடையும் வகையில் 25 கைவினைத் தொழில்கள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டன.

அதன்படி, பாசிமணி வேலைப்பாடு, பனை ஓலை, பிரம்பு வேலைப்பாடு, ஓவியம் வரைதல், வர்ணம் பூசுதல், துணி கலைவேலைபாடுகள், நகை செய்தல், சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை, துணி வெளுத்தல், பொம்மை தயாரிப்பு, மலர் வேலை, தையல் தொழில், மரவேலைகள், படகு தயாரித்தல், உலோக வேலை, மண்பாண்டம், கூரை முடைதல், கட்டட வேலை, கயிறு பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல், பொம்மை தயாரிப்பு என 25 வகையான தொழில்களுக்குப் பயிற்சி மற்றும் மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது.



**விஸ்வகர்மா யோஜனாவைத் திணிக்க நினைத்தவர்களின் எண்ணத்தை ‘கலைஞர் கைவினைத் திட்டம்’ மூலம் தவிடுபொடியாக்கியிருக்கிறது திராவிட மாடல் அரசு.**

அதிகபட்சம் ரூ.3 லட்சம் வரை கடனுதவி பெறலாம். 25% மானியமாக அதிகபட்சம் ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். மேலும், 5% வரை வட்டி மானியமும் உண்டு.

35 வயது நிரம்பிய யார் வேண்டுமானாலும் இந்தத் தொழில்களுக்கு விண்ணப்பிக்கலாம். 35 வயதைத் தாண்டிவிட்ட சூழலிலும், வேலைவாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு தங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பு, கேள்விக்குறியாகுமே என்ற அச்சம் மேலோங்கத் தொடங்கும். அப்படிப்பட்டவர்களுக்கான ஒரு வாழ்வாதார வாய்ப்பாக இத்திட்டம் அமைந்திருக்கிறது. WWW.MSMEONLINE.IN.GOV.IN என்ற அதிகாரப்பூர்வ இணையதளப் பக்கத்தில் விண்ணப்பிக்கலாம். தகுதியான விண்ணப்பதாரர்களை மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் தலைமையிலான குழு சரிபார்த்து வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யும்.

### வாய்ப்பும் வரவேற்பும்!

ஒவ்வொரு நிதியாண்டுக்கும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் பயனாளிகளுக்குப் பயிற்சியும், மானியத்துடன் கடனுதவியும் வழங்குவது இத்திட்டத்தின் இலக்கு. இதுவரை 32 ஆயிரத்து 558 பேர் விண்ணப்பித்துள்ளனர். அதில் 18 ஆயிரத்து 496 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, 5 ஆயிரத்து 651 மனுதாரர்கள் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 424 பேர் இதுவரை பயிற்சியை முடித்துவிட்டனர். அரசாணை வெளிடப்பட்ட 70 நாட்களுக்குள் நடந்திருப்பவை இவையெல்லாம். எப்படி ஆன்லைனில் விண்ணப்பிக்க முடியுமோ, அதுபோல தங்கள் விண்ணப்பத்தின் நிலை என்னவென்பதைப் பின்தொடரும் வசதியும் உள்ளது. திட்டம் வெளிப்படைத்தன்மையோடு செயல்படுத்தப்படுகிறது.

அடிப்படையில், இது சாதாரண தொழிற் பயிற்சி மற்றும் கடனுதவித் திட்டமாகவே தெரியும். ஆனால், குமரி முனையில் வானுயர்ந்த வள்ளுவர் சிலையை கலைஞர் வைத்ததால், விவேகானந்தரை வைத்தவர்களின் நோக்கம் தவிடுபொடியானது. அதுபோல, விஸ்வகர்மா யோஜனாவைத் திணிக்க நினைத்தவர்களின் எண்ணத்தை ‘கலைஞர் கைவினைத் திட்டம்’ மூலம் தவிடுபொடியாக்கியிருக்கிறது திராவிட மாடல் அரசு. சாதியைத் தக்கவைக்க ஒன்றிய அரசு உருவாக்கிய திட்டத்தை உருமாற்றி, அதிலும் சமூகநீதியைச் செயல்படுத்தியிருக்கிறார் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

**...சாதனை தொடரும்**

## இந்தித் திணிப்பின் குறுக்கு வழி!

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியைத் தராமல் இழுத்து அடித்த ஒன்றிய அரசு, அதை வேறு மாநிலத்துக்குத் திருப்பி விட்ட விவரங்கள் சமீபத்தில் வெளியாகின. தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும் என்று சொல்லி வந்தவர்கள், இப்போது நேரடியாக இந்தியை ஏற்றுக் கொண்டால்தான் பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது தொடர்பாக, ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்தன் பிரதான் கூறியுள்ள கருத்து, குறுக்கு வழியில் இந்தியைத் திணிக்கும் ஒன்றியத்தின் முயற்சியை அப்பட்டமாக வெளிப்படுத்தி உள்ளது.

படிப்பறிவில்லாத வடக்கு வாழ் மக்களை மதத்தின் பெயரால் ஏமாற்றி, பதவிக்கு வந்த பா.ஜ.க. அரசு, தனக்கு அதிகாரமில்லாத ஒரு துறையில் வகுத்த கொள்கைக்கு, இந்தியாவிலேயே கல்வித்துறையில் முன்னோடி மாநிலத்தைப் பணிய வைக்கவேண்டும் என்று நினைப்பதும், முடியாது என்பவர்களுக்கு முறையாக சேர வேண்டிய நிதியைத் தடுப்பதும், பாசிசத்தையும் தாண்டிய கொடுங்கோன்மைச் செயல்.

‘வரி கட்டுவதற்கு மட்டும் இவர்களுக்குத் தமிழ்நாடு வேண்டும், அதை வைத்து, வடக்கை வாழ வைத்துக்கொள்வார்கள். அதிலும் அந்த மாநிலங்களின் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களுக்கு ஒரு பயனுமில்லை. நம் வரிப்பணம் முழுவதையும் அதானி, அம்பானி என்று பனியா கும்பலுக்கும், சமஸ்கிருத கொள்ளை கும்பலுக்கும் அள்ளிக்கொடுப்பார்கள். தமிழ்நாட்டை வஞ்சிப்பார்கள்’ என சமூக வலைத்தளங்களில் பலரும் மிகுந்த கண்டனத்தை பதிவு செய்து வருகின்றனர்.

## :ப்ளாஷ்பேக்





வி.பெரியசாமி

### தளபதிக்கு மாலை, மலர்க்கிரீடம்!

1987-ஆம் ஆண்டு அன்றைய தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் தொகுதி, வளவனூர் பேரூராட்சியில் அனைத்து வார்டுகளிலும் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரங்களால் கழக கொடியேற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு வருகை தந்த தளபதி அவர்களுக்கு வளவனூர் வார்டு செயலாளராகப் பணியாற்றிய நான் மாலை, மலர்க்கிரீடம் அணிவித்து, அழகு பார்த்த தருணம்.

**– வி.பெரியசாமி, 3-வது வார்டு செயலாளர், வளவனூர், விழுப்புரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### தமிழுக்கு ஆபத்தென்றால், தமிழனுக்கும் ஆபத்து!

1963-ஆம் ஆண்டில் இந்தித் திணிப்புக்கு எதிராக, சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலைஞரும் ராஜாஜியும் கலந்து கொண்டனர். ‘இந்தித் திணிப்பினால் தமிழனுக்குத்தான் ஆபத்து, தமிழுக்கு ஆபத்து இல்லை’ என்று கூறி வந்த ராஜாஜிக்கு அந்தக் கூட்டத்தில் பதில் அளித்தார் கலைஞர். ‘பானைக்கு ஆபத்து என்றால், பானையில் இருக்கிற பாலுக்கும்தான் ஆபத்து, அதைப்போல தமிழனுக்கு ஆபத்து என்றால், தமிழுக்கும்தான் ஆபத்து’ என்று ராஜாஜி குறிப்பிடுகிறார்’ என விளக்கம் அளித்தார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

752

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131